Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 265

வியாழக்கிழமை
18 ஒகஸ்ட் 2022

ஆவணி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

**முச்சந்தி முரளி**



"பாவியர் போன இடமெல்லாம் பள்ளமும் திட்டியும் எண்ட மாதிரி கோத்தா போற இடமெல்லாம் ஒரே குண்டு வெடிப்பும் தான் பாருங்கோ"

# கடினமான காலத்தையே கடக்கின்றோம் இப்போது!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஓகஸ்ட் 18

இப்போது நாம் கடினமான காலத்தைக் கடந்து சென்று கொண்டிருக்கிறோம். அதிர்ஷ்டவசமாக, எங்கள் தேவைகளுக்குச் செலுத்த இரண்டு அல்லது மூன்று மில்லியன் டொலரைத் தேட வேண்டியிருந்த காலத்தைக் கடந்துவிட்டோம். ஆனால் நாம் இன்னும் நெருக்கடியை வெற்றிகொள்ள வில்லை. இறக்குமதியில் தங்கியிருக்கும் பொருளாதாரமாக நாம் தொடர்ந்தும் பயணிக்க முடியாது. தற்போது நமது வர்த்தகக் கையிருப்பு நமக்குச் சாதகமாக இல்லை – இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

12

# பலதும் பத்தும் பார்த்தே தடையை நீக்கினோம்!

## ஜனாதிபதி ஊடகப் பிரிவு விளக்கம்

கொழும்பு, ஓக. 18

முறையான - ஆழமான - தகவல் ஆய்வு மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் 316 தனிநபர்களையும், 6 நிறுவனங்களையும் தடைப்பட்டியலில் இருந்து நீக்கத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் புதிதாக அடை

12

### தாய்லாந்தில்

# தொடர் குண்டு வெடிப்பு கோத்தாவுக்கு ஆபத்தில்லை

கொழும்பு, ஓக. 18

தென் தாய்லாந்தில் குறைந்தது 17 இடங்களில் நேற்று குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது. அவற்றில் சில குண்டு வெடிப்புத் தாக்குதல்கள், தீயை ஏற்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் ஆகக் குறைந்தது 15 பேர் வரையில் உயிரிழந்துள்ள

11

### ஒகஸ்ட் 24 இல்

# நாடு திரும்புவார் கோத்தாபய!

## அவரது உறவினரான உதயங்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 18

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கைக்கு மீண்டும் வருகை தரவுள்ளதாக ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவரும் அவரது உறவினருமான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

11

# லாப்ஸ் எரிவாயு விலை சரிவு

கொழும்பு, ஓக. 18

லாப்ஸ்எரிவாயுஅடங்கிய 12.5 கிலோகிராம் சிலிண்டரின் விலை

11

# 3 அரச நிறுவனங்கள் விரைவில் தனியார்மயம்

## தொழிற்சங்கங்களைப் பற்றி எந்தக் கவலையுமில்லை என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஓக. 18

சிறிலங்கன் எயார் லைன்ஸ், சிறிலங்கா இன்ஸூரன்ஸ், சிறிலங்கா ரெலிக்கொம் ஆகிய மூன்று அரசாங்க நிறுவனங்களையும்தனியார் மயப்படுத்துவது தொடர்பில் ஆராய்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

11

# தக்க தருணத்தில் உதவியது நாமே!

## இலங்கைக்கு நினைவூட்டுகிறது இந்தியா சீனக் கப்பல் விவகாரத்தால் விசனம்

கொழும்பு, ஓக. 18

இந்தியப் பெருங்கடலில் தங்கள் செல்வாக்கை விரிவுபடுத்த பல நாடுகள் தீவிரமாக முயன்று வருகின்றன. ஆயினும் இந்தியப் பெருங்கடல் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் மற்றொரு முக்கியமான புள்ளியாக மாறாது - இவ்வாறு இந்திய

11

# இந்து சமுத்திரத்தில் கண்காணிப்பு தீவிரம்

கொழும்பு, ஓக. 18

அம்பாந்தோட்டை கடற்பரப்பில் சீனக் கப்பல் நங்கூரமிட்டுள்ள நிலையில், இந்தியாவின் இராமேஸ்வரம் கடலில் இந்தியக் கடற்படையினர்

09

# வடக்கு மாகாண சபையில் திடீர் இடமாற்றங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 18

வடக்குமாகாணசபைக்கு உட்பட்ட நிர்வாக அதிகாரிகள் சிலருக்கு திடீர் இடமாற்ற உத்தரவுகள் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவால் நேற்று வழங்கப்பட்டுள்ளன.

09

### தகாத உறவு

# 5 ஆண்களுக்கும், 2 சிறுமிகளுக்கும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஓக. 18

17 வயது சிறுமிகள் இருவரை கடத்திச் சென்றமை மற்றும் தகாத உறவு கொண்டமை என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் பேருந்துச் சாரதிகள் இருவர், நடத்துநர்கள் இருவர் உட்பட ஐவரை

10

# போதை ஊசியாலேயே பூசகர் மயங்கிச் சாவு!

## 3 மாதங்களில் 7 பேர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 18

ஊசி மூலம் போதைப் பொருளைப் பயன்படுத்தியமையே கதிரையிலிருந்து மயங்கிச் சரிந்தவர் உயிரிழக்கக் காரணம் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

11

# இராமநாதன் நுண்கலைத்துறை பீடமாக தரமுயர்ந்தது

யாழ்ப்பாணம், ஓக. 18

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் கீழ் இயங்கி வந்த இராமநாதன் நுண்கலைத்துறை 'சேர்.

10

# எதிரணியிலிருந்து 20 பேர் அரசாங்கத்துடன் இணைவு?

கொழும்பு, ஓக. 18

ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிரணியிலிருந்து 20 க்கும் மேற்பட்டோர் அரசுடன் இணைய இதுவரை இணக்கம் தெரிவித்துள்ளனர். அவர்களுள் தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடங்கு

10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மனித உரிமைகள் விவகாரத்தில்

# ஒருமித்த கருத்தை உருவாக்க இலங்கை அரசு முயற்சியாம்

## ஜெனிவாவை முன்னிட்டு அலி சப்ரி விளக்கம்



**கொழும்பு, ஓக. 18**

**மனித உரிமைகள், நீதி மற்றும் சமத்துவம் தொடர்பான விடயங்களில் மேலும் முன்னேற்றம் அடையும் வகையில் ஒருமித்த கருத்தை உருவாக்கும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது - இவ்வாறு தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.**

ஜெனிவாவில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடருக்கு முன்னதாக தற்போதைய அபிவிருத்திகள் குறித்து விளக்கமளிக்கும் முகமாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, வெளிநாடுகளின் தூதரக அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலிலேயே அலி சப்ரி இவ்வாறு தெரிவித்துள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

தூதரக அதிகாரிகளுடனான கலந்துரையாடலில், அரசமைப்புக்கு அமைவாக பதவிகளை ஜனநாயக ரீதியாக மாற்றுதல் உட்பட இலங்கையின் தற்போதைய அபிவிருத்திகளை அமைச்சர் சப்ரி, தூதரக அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டினார்.

அரசியல் முன்னணியில், சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும், 19 ஆவது திருத்தத்தை திறம்பட மீட்டெடுக்கும் அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளமையையும், நாடாளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும், அரசாங்கத்தின் நிர்வாகக் கிளைகளின் மேற்பார்வைக்கும் மற்றும் முக்கியமான நிறுவனங்களின் சுதந்திரத்துக்கும் பங்களிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

அண்மைய ஆண்டுகளில் நாட்டில் முன்னெப்போதும் இல்லாத சூழ்நிலை நிலவிய போதிலும், கொரோனாத் தொற்றுநோய்க்குப் பின்னர், உள்நாட்டு செயன்முறைகளின் மூலம் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத் துறையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். மனித உரிமைகள், நீதி மற்றும் சமத்துவம் தொடர்பான விடயங்களில் மேலும் முன்னேற்றம் அடையும் வகையில் ஒருமித்த கருத்தை உருவாக்கும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

மனித உரிமைகள் பேரவையுடனான தனது ஆக்கபூர்வமான ஈடுபாட்டை எதிர்வரும் 51ஆவது அமர்வில் இலங்கை தொடரும் என்றும் அமைச்சர் அலி சப்ரி மேலும் தெரிவித்தார்.

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம், வெளியுறவுச் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் நிதிச் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோரும் இந்த விளக்கமளிக்கும் நிகழ்வில் பங்கேற்றனர். (ம)

## திரையில் இருந்தும் தூக்கப்பட்ட கோத்தா

கொழும்பு, ஓக.18

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்புக்களில் பயன்படுத்தப்பட்ட பிரபல உத்தியோகபூர்வ டிஜிட்டல் திரையிலிருந்து முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் உருவம் நீக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை முதல் பெரமுனவின் ஊடக சந்திப்புகளில் இந்தத் திரை பயன்படுத்தப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

முன்னர் டிஜிட்டல் பின்னணியில் மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச மற்றும் பஸில் ராஜபக்ச ஆகியோரின் முகங்கள் சுழற்சி முறையில் காண்பிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## பீல்ட் மார்ஷல் போனால் பெரும் பதவி கிடைக்கும்

### சரத் பொன்சேகா நம்பிக்கை

கொழும்பு, ஓக. 18

பீல்ட் மார்ஷல் பதவியிலிருந்து என்னை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமானால், அந்தப் பதவிக்கு மேலான கௌரவப் பட்டத்துடன் மீண்டும் வருவேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

எனது நான்கு நட்சத்திர அந்தஸ்தை மஹிந்தவே நீக்கினார். அவர் என்னைப் பழிவாங்கினாலும், அதுவே எனக்கு சாதகமாக அமைந்தது. அதனால்தான் நான் பீல்ட் மார்ஷல் அந்தஸ்துக்குத் தரமுயர்த்தப்பட்டேன். தற்போது பீல்ட் மார்ஷல் பட்டத்தைப் பறிக்குமாறு சிலர் கூச்சலிடலாம். அவ்வாறு பறித்தாலும் அதைவிட உயரிய கௌரவ பதவியுடன் மீண்டும் வருவேன். 'மார்ஷல் ஒப் ஸ்ரீலங்கா' என்பது உயரிய பட்டம். அந்த நாமம் கிட்டும் - என்றார். (எ-இ)

## ஜனாதிபதியை ஆதரித்த எம்.பிக்களுக்கு சலுகைகள்!

கொழும்பு, ஓக. 18

இடைக்கால ஜனாதிபதியை நியமிப்பதில் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்று சேர்ப்பதில் பல்வேறு அனுகூலங்களும் சலுகைகளும் வழங்கப்பட்டன. அவற்றை ஊழல் மற்றும் முறைகேடுகள் என்று கூறலாம். அந்த சலுகைகள் வடிவில் முறைகேடுகளை தொடர அமைச்சரவைப் பத்திரம் கூட சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் தெரிவித்தார்.

நமது நாடு பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பேரழிவை எதிர்கொண்டிருக்கும் நேரத்தில் தற்போதைய பிரதமரால் விசித்திரமான அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அடுத்த சில மாதங்களுக்கு இடைக்கால ஜனாதிபதி நியமனத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பல வசதிகளை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## சர்வகட்சி அரசாங்கத்தால் பெரமுனவில் பிடுங்குப்பாடு

கொழும்பு, ஓக. 18

சர்வகட்சி அரசாங்கத்தின் அமைச்சர்கள் நியமனம் தொடர்பில் பொதுஜன பெரமுனவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இறுதி இணக்கப்பாடு எட்டப்படவில்லை என அறியமுடிகின்றது. அதனால் சர்வகட்சி அரசாங்கம் உருவாக்கப்படுவது மேலும் தாமதமாகும் என்று அரசாங்க தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் ஜனாதிபதியும் பிரதமரும் சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பாக பல அரசியல் கட்சிகளுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடல்களில், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் சர்வகட்சி அரசாங்கத்துக்கு இணக்கம் தெரிவித்துள்ளன. அந்தக் கலந்துரையாடல்களில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்கவில்லை.

இந்தச் சூழ்நிலையின் அடிப்படையில் கட்சிகள் ஒன்றிணையாவிட்டால் அந்தந்தக் கட்சிகளில் இருந்து இணைய விரும்பும் உறுப்பினர்களை இணைத்து சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க ஜனாதிபதியும் பிரதமரும் தீர்மானித்துள்ளனர்.

அனைவருக்கும் ஆதரவாக ஒன்றிணைந்த குழுக்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்ட போதும், பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான அமைச்சர்களின் கோரிக்கை காரணமாக சர்வகட்சி அமைச்சரவை அமைப்பது மேலும் தாமதமாகும் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

## ரணில் அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஓக. 18

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு எதிராகப் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று கொழும்பில் இன்று முன்னெடுக்கப்படவுள்ளது என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள செயற்பாட்டாளர்களை விடுவித்தல், பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும், பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-14,இ)

## ஓகஸ்ட் மத்தி வரை 17,000 சுற்றுலாவிகள் வருகை



கொழும்பு, ஓக. 18

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை மீண்டும் அதிகரித்து வருகின்றது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. அதற்கமைய இந்த மாதத்தின் முதல் இரு வாரங்களில் 17 ஆயிரம் சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானியா உட்பட ஐரோப்பிய நாடுகளிலும் இந்தியா, கனடா ஆகிய நாடுகளிலிருந்தும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

கடந்த மே மாதத்தில் மாத்திரம் நாளாந்தம் 650 சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவானதுடன், தற்போது அந்த எண்ணிக்கை ஆயிரத்து 600 வரை உயர்ந்துள்ளது என்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. (ம-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தவிர்க்கப்பட வேண்டிய தவறான முன்னுதாரணம்

ஈழத்தமிழர்களின் வாழ்வியலில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு தனித்துவமானதோர் இடமுண்டு. ஒரு உயர் கல்விச்சாலை என்பதையும் தாண்டி, தமிழர்களின் இருப்பு பேரினவாதிகளால் நசுக்கப்பட்டபோது, துணிந்து குரல் கொடுத்த கொடுக்கின்ற வரலாறு யாழ்.பல்கலைக்கழகத்துக்கு உண்டு. தமிழ் மக்களின் விடுதலைக்கான, உரிமைக்கான, பெருமைக்கான அடையாளமும் யாழ்.பல்கலைக் கழகம்தான். 'கம்பஸ்காரர் செய்தால் சரியாகத்தான் இருக்கும்' என்னுமளவுக்கு அவர்கள் செய்வதெல்லாம் நன்மைக்கே என்ற அபிப்பிராயமும் மக்களிடம் உண்டு. ஏறக்குறைய வடக்குமாகாண மக்களின் எண்ணப்பாங்கைத் தீர்மானிக்கும் சக்தியாக – ஒரு முன்மாதிரியானவர்களாக – பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், மாணவர்களும் மாறியிருந்தனர். ஆனால், அந்தநிலைமை இப்போது தலைகீழாகிக் கொண்டு வருவதை அங்கு நடைபெறும் சில சம்பவங்கள் உணர்த்துகின்றன.


'துறைத்தலைவர் பதவியை எனக்குத் தரவிட்டால் உயிரை மாய்ப்பேன்' என்று கூறி, பேராசிரியர் ஒருவர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முன்னிலையில் நேற்றுமுன் தினம் தீக்குளிக்க முயன்றமை இத்தகைய தலைகீழ் போக்குக்கு மிகச் சமீபத்திய உதாரணம். குறித்ததொரு துறையின் தலைவராக இருந்தவர் ஒருவருட விடுப்பில் செல்லவிருந்த நிலையில், அவரின் இடத்துக்கு இன்னொரு பேராசிரியரை நியமிக்க பல்கலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்திருந்தது. ஆனால், இப்படி பதவி மாற்றம் நடப்பதை 'முதலில் துறைத்தலைவராக இருந்தவர் மீதான பாலியல்ரீதியான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாலேயே அவரைப் பதவி நீக்கிவிட்டு, புதியவர் நியமிக்கப்பட்டுள்ளார்' என்று சில இணையங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் தகவல்கள் பரவின. இது முன்னைய துறைத் தலைவருக்கு ஒரு தன்மானப் பிரச்சினையாக மாற, அவர் தனது விடுப்பை இரத்துச் செய்துவிட்டு மீண்டும் துறைத் தலைவர் பதவிக்கு வரப்போவதாக அறிவித்தார். அப்படி பழையவர் வந்தால் புதியவருக்கு பதவி கிடைக்காதே. 'இப்படி பதவியை தந்துவிட்டு அதனை உடனேயே பிடுங்குவதா?' என்று கோபமடைந்த அந்தப் புதிய பேராசிரியர் முதல்நாள் தன் வீட்டில் உயிர்மாய்க்க ஒரு முயற்சியை மேற்கொண்டார் என்றும், அதனை அவரது வீட்டிலிருந்த ஒருவர் நேரலையாக பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிலருக்கு காண்பித்திருந்தார் என்றும் உறுதிப்படுத்தப்படாத ஒரு தகவல் உண்டு. அந்தப் பேராசிரியர் அடுத்தநாள், (நேற்றுமுன் தினம்) தனக்கு நெருங்கிய சிலருக்கு குறுந்தகவல் அனுப்பிவிட்டு, மேற்சொன்னதைப் போன்று 'பதவி தராவிட்டால் உயிர் மாய்ப்பேன்' என்று சொல்லிக்கொண்டே மண்ணெண்ணெயை தன் மீது ஊற்றி, தீக்குளிக்க முயன்றுள்ளார். எனினும் துணைவேந்தர் உள்ளிட்டோர் அந்த முயற்சியை தடுத்துவிட்டனர்.

மனிதர்கள் எல்லோருக்கும் கோபமும் ஒரு இயல்பே. ஆனால், அதை எங்கு, எந்தவிதம் காட்டவேண்டும் என்ற வரையறைகள் உண்டு. குறித்த பேராசிரியரின் கோபத்துக்குப் பின்னால் பல தார்மீக நியாயங்கள் இருக்கக்கூடும். ஆனால், அந்த நியாயங்களை எல்லாம் அவரின் ஒற்றைச் செயல் இல்லாமல் ஆக்கிவிட்டது. இத்தனைக்கும் அந்தப் பேராசிரியர்தான், பல்கலைக்கழக மாணவர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டவர். எதிர்காலத் தலைவர்களான மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பில் முன்மாதிரியாக இருக்கவேண்டியவரே இப்படி பதவிக்காக தீக்குளிக்க – உயிரை மாய்க்க முயல்வதென்பது தவறான முன்னுதாரணமாகிவிடும். அதுவும் அண்மைக்காலமாக தற்கொலைகள் யாழ். பல்கலைக்கழக மாணவர்களிடையே அதிகரித்துவரும் சூழலில், அவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய பேராசிரியரும் அதே பாதையைத் தெரிவு செய்வதென்பது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமல்ல. பேராசிரியர் காட்டிய தவறான பாதையில் மாணவர்களும் அதேபோன்ற – தவறான– முடிவுகளை எடுத்தால் நிலைமை எவ்வளவு விபரீதமாகிவிடும்? (பேராசிரியர் தீக்குளிக்க முயன்ற அதேநாளில்– நேற்றுமுன் தினம்– பல்கலைக்கழக மாணவன் ஒருவனும் உயிர் மாய்க்க முயன்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.)

குறித்த பேராசிரியரின் தரப்பில் அவரது கோபத்துக்கான காரணங்கள் இருப்பின் அதனை வெளிப்படுத்த பொருத்தமான ஓராயிரம் வழிமுறைகள் இருக்கின்றன. ஆனால், அவற்றையெல்லாம் புறமொதுக்கிவிட்டு, அவசரக்குடுக்கைத்தனமாக இப்படி உயிர்மாய்த்தலே தனது கோபத்தைக் காட்ட வழி என்று நினைப்பதை யார்தான் ஏற்றுக்கொள்வார்கள்? கோபமென்பது பொல்லாப் பெருநெருப்பு. கண்ணகியின் கோபத்தால் மதுரை எரிந்ததைப்போல, அது எல்லாவற்றையும் பொசுக்கி நாசமாக்கிவிடும். யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் இனிமேல் மாணவர்கள் மீது மட்டுமல்லாமல் இதுபோன்ற தவறான முன்னுதாரணமான 'பெரியவர்கள்' மீதும் ஒழுக்காற்றுநடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் யாழ்.பல்கலைக்கழகம் மக்கள் மனதில் தரமிறங்காமல், தங்கமாக மின்னும் என்பதே பொருள் காண்பதறிவு.

**நாளொரு நல்வார்த்தை**

"மனிதனின் தீய குணங்களைப் பித்தளைத் தட்டில் பொறிக்கிறோம். அவர்களின் நற்குணங்களை ஓடும் தண்ணீரில் எழுதுகிறோம்"
- ஷேக்ஸ்பியர்



# நாணய நிதியத்தினை நாடியோர் துரோகிகள்

## அவர்களை கடலில் வீசவேண்டும் என வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஓக. 18**

**சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு தேவை என்று கூறுபவர்கள் துரோகிகள் என்றும் அந்தத் துரோகிகள் ஒவ்வொருவரையும் பிடித்துக் கடலில் வீசவேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் காலிமுகத்திடல் செயற்பாட்டாளர்கள் கேள்விகளை எழுப்பவில்லை. அரச நிறுவனங்களை தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இலங்கையின் அரசாங்கத்திலும் எதிர்க்கட்சியிலும் உள்ளவர்களில் பெரும்பாலானோர் சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர்கள். சர்வதேச நாணய நிதியம் இலங்கையில் 16 தடவைகள் தலையீடு செய்துள்ளது. அந்தத் தலையீட்டின் விளைவே தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி - என்றார். (ம)

# நாட்டைக் கூறுபோட்டு விற்கிறது அரசாங்கம்

## மின்சாரசபையின் தொழிற்சங்க கூட்டமைப்பு ஆதங்கம்

நாட்டின் வளங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் தாரைவார்த்துக் கொடுத்து வருகின்றது என இலங்கை மின்சாரசபை கூட்டு தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.
இதுதொடர்பில் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒன்றிய அழைப்பாளர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்ததாவது:-
தற்போதைய அரசாங்கம் அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு எமது தேசிய வளங்களை விற்பனை செய்கின்றது. இதனால் இலங்கை பெரும் வல்லரசுகளின் போர்க்களமாக மாறியுள்ளது. சீனாவுக்கு வழங்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவின் ஆய்வுக் கப்பல் வந்து தரித்து நிற்கின்றது. இதனால் இலங்கை அரசுக்கு இந்தியா கடும் அழுத்தம் பிரயோகின்றது. அதனைச் சமாளிக்கும் முகமாக பூநகரி - மன்னார் காற்றாலைத் திட்டத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒவ்வோர் நாட்டுக்கும் இலங்கையை கூறுபோட்டு விற்பனை செய்வதால் நாட்டின் வளங்கள் அழிகின்றன. நாட்டில் வாழும் மக்கள் மூச்சுவிடக் கூட முடியாத நிலைக்குள்ளாக்கப்படுகின்றனர் - என்றார். (ச-இ)

**நாளை**
**19.09.2022**
**வெள்ளிக்கிழமை**
**ஆவணி 03**
சுபநேரம் : 06.05 - 07.35
ராகுகாலம்: 10.35 - 12.05
நல்லூர் கந்தசுவாமி கார்த்திகை உற்சவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஓக. 18

வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவு மழை பெய்யக்கூடும். இடியுடன் கூடிய மழையின்போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக் கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள மக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 40-45 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் -என்றுள்ளது. (ச-இ)



# மின்கட்டண அதிகரிப்பு: விவசாயிகள் அந்தரிப்பு!

### மேட்டுநிலப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியவில்லை என சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஓக. 18

**கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்ட விவசாயிகள் மின்கட்டண அதிகரிப்பால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.**

மண்ணெண்ணெய் இல்லாத நிலையில், மின் இணைப்பின் ஊடாகவே மேற்படி விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். தற்போது மின்கட்டணம் சுமார் 75 வீதம் அதிகரித்ததை அடுத்து விவசாயத்தைக் கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளது என்று சிறுதானிய மற்றும் மேட்டுநில விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மேலும் தெரிவித்ததாவது:-

இந்து ஆலயங்களில் உற்சவங்கள் இடம்பெற்றுவரும் இந்தக் காலத்தில் மரக்கறிகளின் விலைகள் உச்சம் தொட்டுள்ளன.

இந்த நிலையில், விவசாயிகள் விவசாயநடவடிக்கைகளில் இருந்து விலகினால் மரக்கறிகளின் விலை மேலும் அதிகரிப்பதுடன் அவற்றுக் குத்தட்டுப்பாடும் ஏற்படும். எனவே நிலைமையின் தீவிரத்தைக் கருத்திற்கொண்டு உரிய அதிகாரிகள் விரைவில் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் - என்றனர். (ம-113)

தென்மராட்சியில்

## ஒரே நாளில் 8 விபத்துகள்

### மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிப்பு

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை மட்டும் ஒரே நாளில் 8 விபத்துகள் இடம்பெற்றுள்ளன என்று சாவகச்சேரி மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விபத்துச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நாட்டில் தற்போது சீராக பெற்றோல் விநியோகம் இடம்பெறும் நிலையில் வீதிகளில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் மீண்டும் அதிகளவில் விபத்துச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. ஆகவே மக்கள் அவதானமாக வாகனங்களைச் செலுத்தி விபத்துக்களைத் தவிர்க்கவேண்டும் என துறைசார் அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-131)

## சாவகச்சேரி வீடொன்றில் எரிவாயு அடுப்பு வெடிப்பு

சாவகச்சேரி, ஓக. 18

சாவகச்சேரிப் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவம் பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் டச்சு வீதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது. வீட்டில் சமையலில் குடும்பப்பெண் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே குறித்த எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது. இந்த அசம்பாவிதத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்த அசம்பாவிதம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். தென்மராட்சிப் பகுதியில் நீண்ட நாள்களின் பின்னர் எரிவாயு வெடிப்புச் சம்பவம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-131)

## நுரைச்சோலை வழமைக்குவர இன்னமும் 50 நாள்கள் தேவை!

### பொறியியலாளர்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 18

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி அத்தியாவசிய பராமரிப்பு பணிகளுக்காக இடைநிறுத்தப்பட்ட மின் பிறப்பாக்கி மீளவும் வழமை போன்று செயற்படுவதற்கு இன்னமும் 50 நாள்கள் தேவைப்படும் என பொறியியலாளர்கள் இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளனர்.

தற்பொழுது இரண்டாம் இயந்திரக் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக 560 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின்சாரக் கட்டமைப்பில் இணைத்துக் கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது.

கடந்த சில வாரங்களில் பெய்த கடுமையான மழை காரணமாக நீர் மின் உற்பத்தி அதிகரித்துள்ளதால் நாள் ஒன்றுக்கு 3 மணித்தியாலங்கள் மின்வெட்டு நடைமுறைப்படுத்துவது போதுமானது. இருந்தபோதும், மின் பிறப்பாக்கி பழுதடைந்தமையால் நீர்மின் உற்பத்தியை மந்த கதியிலேயே செய்ய வேண்டியுள்ளது என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (எ-இ)

## இலங்கை வருகிறது சுப்பர் டீசல் கப்பல்

கொழும்பு, ஓக.18

ஒரு லட்சம் மெற்றிக் தொன் சுப்பர் டீசல் மற்றும் டீசலை ஏற்றிய கப்பல் ஒன்று விரைவில் இலங்கையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டு மாதங்களுக்குப் பின்னர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சுப்பர் டீசல் கொண்டுவரப்படுகிறது.

இதேவேளை, தேசிய எரிபொருள் அட்டைத் திட்டத்தின் கீழ், அரச வாகனங்களைப் பதிவு செய்வது தொடர்பான முக்கியமான கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர தலைமையில் நடைபெற்றுள்ளது.

இணையவழியில் அண்மையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர், மாகாண செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பல்வேறு அரச நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (எ-இ)

## உணவுக் கொள்வனவு இலங்கையில் வீழ்ச்சி!

கொழும்பு, ஓக. 18

கடந்த ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில், ஜூலை மாதத்தில் உணவு மற்றும் குளிர்பானத் துறையில் கொள்வனவுக் குறியீடு வீழ்ச்சியடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில், ஜூலை மாதத்தில் உணவுக்கான கொள்வனவுக் குறியீடு 2.7 வீதம் குறைந்துள்ளது -என்றும் மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## நுணாவில் ஐ.ஓ.சியின் சேவை நேரம் நீடிப்பு

சாவகச்சேரி, ஓக. 18

நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிலையம் நேற்று புதன்கிழமை தொடக்கம் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை சேவையில் ஈடுபடும் என்று நுணாவில் ஐ.ஓ.சி எரிபொருள் நிலையத்தின் உரிமையாளர் அறிவித்துள்ளார்.

அதற்கமைய வழமைபோன்று "க்யூ ஆர்" குறியீடு அடிப்படையில் பெற்றோல் மற்றும் டீசல் என்பவற்றைக் குறிப்பிட்ட நேரத்துக்குள் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-14-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருவார காலத்தில் மட்டும் 42 கொரோனா மரணங்கள்

கொழும்பு, ஓக.18

**கொரோனாத் தொற்றுக் காரணமாக நாட்டில் ஒரு வாரத்தில் 42 உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**



அதேநேரம் கடந்த ஒரு வாரத்தில் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொரொனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 15ஆம் திகதி மட்டும் 129 கொரொனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்கள் பதிவாகியுள்ளனர்.

இதுவரையில் நாட்டில் மொத்தமாக 6 லட்சத்து 68 ஆயிரத்து 12 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். 20 வயதுக்கும் மேற்பட்டவர்களில் இதுவரையில் 8 மில்லியன் பேர் கொரோனா முதல் தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர் எனவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார். கொரோனாத் தொற்று நாட்டில் மீண்டும் தீவிரமாகி வரும் நிலையில், மாஸ்க், தொற்றுநீக்கித் திரவப் பயன்பாடு, சமூக இடைவெளி உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளை பொதுமக்கள் இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும் என்று சுகாதாரத் துறையினர் மீண்டும் மீண்டும் எச்சரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## மேய்ச்சலுக்கு விடப்பட்ட பசுவைக் காணவில்லை!

யாழ்ப்பாணம், ஓக. 18

நவாலி, வழுக்கையாற்றுப் பகுதியில் மேய்ச்சலுக்காகக் கட்டப்பட்டிருந்த மாடு காணாமல் போயுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பலாலி வடக்கைச் சேர்ந்த ஒருவர் தனது பசுவை வழமையாக அங்கு மேய்ச்சலுக்கு விடுவது வழமை. நேற்றுமுன்தினமும் பசு மேய்ச்சலுக்காகக் கட்டியிருந்த நிலையில், அதனை அவிழ்க்கச் சென்றபோது அது காணாமல் போயிருந்தது. இந்தப் பசுவின் பெறுமதி ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-125)



## நல்லூர் மந்திரிமனையை பாதுகாக்கக் கோரிக்கை!

யாழ்ப்பாணம், ஓக.18

நல்லூர் மந்திரிமனையின் முன் கூரைப்பகுதி கீழே விழும் நிலையில் காணப்படுகின்றது. அதைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொல்லியல் சின்னமாகக் கருதப்படும் நல்லூர் மந்திரிமனை தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ளபோதும், அந்தக் காணி தனியார் காணியாகவே உள்ளது.

மந்திரிமனையைப் பாதுகாப்பதற்குப் பலர் நிதியுதவி வழங்கத் தயாராக உள்ளபோதும், தனியார் காணி என்பதால் சீரமைப்பு நடவடிக்கைகள் தாமதிக்கப்படுகின்றன என்று கூறப்படுகின்றது.

இந்தநிலையில், யாழ்ப்பாண இராசாதானியின் சின்னங்களுள் முக்கியமானதாகக் கருதப்படும் நல்லூர் மந்திரிமனையை சீரமைத்துப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-125)

## சந்நிதி முருகன் திருவிழா நடைமுறைகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 18

வரலாற்றுச் சிறப்பு மிக்க செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தத் திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில், திருவிழாக்கால நடைமுறைகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆலயத் திருவிழா ஏற்பாட்டுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்று வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆ.சிறி அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

திருவிழாக் காலத்தில் ஆலயச்சூழலில் ஒருவழிப் பாதை நடைமுறைப்படுத்தப்படும். போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதைத் தடுப்பதற்காக ஆலய பிரதான ஆற்றங்கரைப் பக்கத்தில் இருக்கின்ற பாதையின் ஊடாக முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பன வாகன தரிப்பிடத்துக்குச் செல்ல முடியும்.

இந்த வருடம் நீர்பாசனத் திணைக்களப் பாலம் ஊடான நடைபாதைப் போக்குவரத்து இறுதி 5 நாள்களும் அனுமதிக்கப்படும்.

ஆலய பூசைகளின்போது ஆலயச் சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றத் தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆலய தேரோடும் வீதிகளில் நடைபாதை வியாபாரிகளுக்கு மற்றும் தற்காலிக கடைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆலய வீதியில் பக்தி தொடர்பான விடயங்களுக்கே அனுமதிக்கப்படும் என்பதுடன் புதிய கடைகள் மற்றும் வீதியோரக் கடைகள் ஆலய வீதியில் அமைப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

திருவிழாக் காலத்தில் உணவு நிலையங்கள் அமைக்கப்பட்டால், அந்த உரிமையாளர் நாட்டின் எந்தப் பாகத்திலாவது உணவு நிலையம் நடத்திய அனுபவத்தைக் கொண்டிருந்ததல் வேண்டும்.

உணவு நிலையங்களில் உணவைக் கையாள்பவர்கள் மற்றும் அன்னதான மடங்களில் பணிபுரிபவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

உணவு நிலையங்களுக்கான குடி தண்ணீர் பொதுச் சுகாதார பரிசோதகரால் அனுமதிக்கப்பட்ட இடத்தில் இருந்தே பெறப்படவேண்டும்.

கடை உரிமையாளர்கள் ஒவ்வொரு நாளும் முறையாகக் கழிவகற்றல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பொருள்களின் விலை நிர்ணயத்தை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். பக்தர்கள் சுகாதார நடைமுறையைப் பின்பற்றுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது -என்றுள்ளது. (எ-26)

## தடைசெய்யப்பட்ட ஒளிபாய்ச்சி மீன்பிடி; 8 மீனவர்கள் கைது!

முல்லைத்தீவு, ஓக. 18

முல்லைத்தீவுக் கடலில் தடைசெய்யப்பட்ட ஒளிபாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்ட 8 மீனவர்கள் 6 படகுகளுடன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்பரப்பில் கடற்றொழில் நடவடிக்கைகள் சட்டவிரோதமாக இடம்பெறுகின்றன என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் இரவு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அதன்போது தடைசெய்யப்பட்ட ஒளிபாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கொக்கிளாய் கடற்பரப்பில் மூன்று படகுகளும், மாத்தளன் கடற்பரப்பில் ஒரு படகும், வலைஞர்மடம் கடற்பகுதியில் இரண்டு படகுகளும் என மொத்தமாக 6 படகுகளுடன் 8 மீனவர்கள் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

அதனையடுத்து கைது செய்யப்பட்ட மீனவர்களையும் சான்றுப் பொருள்களையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் ஈடுபட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-19)

## சீனக்கப்பலின் செயற்பாடு எந்தநாட்டையும் பாதிக்காது

### சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் உறுதி

கொழும்பு, ஓக. 18

சீனாவின் செய்மதித் தொழில்நுட்ப ஆய்வுக்கப்பலான 'யுவான் வாங்5' என்ற கப்பலின் செயற்பாடுகள் எந்தவொரு நாட்டின் பாதுகாப்பையும் பாதிக்காது என்று சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வெங் வென்பின் தெரிவித்துள்ளார்.

'யுவான் வாங் 5' கப்பல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை நேற்றுமுன்தினம் வந்தடைந்த பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'யுவான் வாங் 5' கப்பல் இலங்கையின் தீவிர ஒத்துழைப்புடன் இந்தியா, அமெரிக்காவின் எதிர்ப்புக்கு மத்தியில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.



குறித்த கப்பலின் கடல் அறிவியல் ஆராய்ச்சி நடவடிக்கைகள் சர்வதேச சட்டத்துக்கு இசைவானவை என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இது வழக்கமான சர்வதேச நடைமுறையாகும். அவை எந்த நாட்டின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களை பாதிக்காது. அத்துடன் கப்பலின் செயற்பாடுகள் எந்தவொரு மூன்றாம் தரப்பினராலும் தடுக்கப்படக்கூடாது -என்றார்.

சீனக் கப்பலின் வருகையால் இந்தியாவின் நலன்களுக்கு அச்சுறுத்தல் என்று இந்திய அரசாங்கம் அறிவித்ததுடன், இந்திய கடற்படையினரும், வான் படையினரும் தொடர்ச்சியாக இரண்டாவது நாளாக நேற்றும் கண்காணிப்பில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-14-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## பளுதூக்கல் சாதனையாளருக்கு சாவகச்சேரியில் பாராட்டு விழா

சாவகச்சேரி, ஓக. 18

தேசிய பளுதூக்கல் போட்டியில் ஒரே நாளில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்த சாவகச்சேரியைச் சேர்ந்த ச.புசாந்தனுக்கு, சாவகச்சேரி நகர சபை பொன்விழா மண்டபத்தில் நேற்றுப் பாராட்டு விழா சிறப்பாக இடம்பெற்றது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் விழா இடம் பெற்றது. நிகழ்வில், தேசியச் சாதனையாளரான ச.புசாந்தன் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி நினைவுப்பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ம-14,9)

## மாணவர்களுக்கு மதிய உணவு கிளிநொச்சியில் முன்னெடுப்பு

கிளிநொச்சி, ஓக. 18

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் செயற்றிட்டம் இலங்கை அனைத்துலக மருத்துவநல அமைப்பால் கிளிநொச்சி சிவபாத கலையகம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 5 கிராமப் புறப் பாடசாலைகளில் குறித்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. நாடு தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி நிலையில் கிராமப்புறப் பாடசாலை மாணவர்களின் அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்திசெய்யும் முகமாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஐ.வரதீஸ்வரன், கிளிநொச்சி தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் பி.கமலராஜன், கரைச்சி பிரதேச செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-113)

## கப்பலேந்தி மாதா ஆலயத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக. 18

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலயத்தில் மாதாவின் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழா அண்மையில் இடம்பெற்றிருந்த நிலையில் மாதாவின் நகைகள் திருட்டுப்போயுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-113)

# மன்னாரில் சிறப்புற்ற திருவள்ளுவர் விழா

**மன்னார், ஓக. 18**

**வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு பேரவையும் இணைந்து நடத்திய திருவள்ளுவர் விழா நேற்றுமுன்தினம் மன்னாரில் சிறப்பாக இடம்பெற்றது.**





மன்னார் மாவட்ட செயலாளர் திருமதி அ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி த. மங்களேஸ்வரன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தர சர்மா பங்கேற்றார். நிகழ்வில் திருவள்ளு வர் சிலைக்கு மாலை அணிவித்து மதிப்பளிக்கப்பட்டு தொடர்ந்து திருவள்ளுவர் தொடர்பான சிறப்புக் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

அத்துடன் 'வள்ளுவம் காட்டும் வாழ்வியல்' எனும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு, திருக்குறள் வழி நாடகம், திருவள்ளுவர் புகழ் பாடும் கோலாட்டம் மற்றும் சிறப்புக் கவியரங்கம் ஆகிய கலைஇலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-213)





பொருளாதார நெருக்கடி நிலையில் மாணவர்களிடையே ஆரோக்கியமான பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கங்களைக் கட்டியெழுப்பும் முகமாக கோண்டாவில் இந்துக் கல்லூரியில் மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. (ச-27)

## கோடா, கசிப்புடன் இருவர் கைதாகினர்!

முல்லைத்தீவு, ஓக. 18

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வள்ளிபுனம், இடைக்கட்டுப் பகுதியில் கோடா, கசிப்புடன் இருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர் என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வள்ளிபுனம் இடைக்கட்டுப் பகுதியில் கசிப்பு காய்ச்சப்பட்டு வருகின்றது என்று புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், குறித்த பகுதியை முற்றுகையிட்ட பொலிஸார் கசிப்பு காய்ச்சிய குற்றச்சாட்டில் இருவரைக் கைது செய்ததோடு இருவர் தப்பிச்சென்றனர் என்றும் தெரிவித்தனர்.

அதனையடுத்து குறித்த பகுதியை சோதனையிட்டபோது 180 லீற்றர் கோடா, 170 லீற்றர் கசிப்பு என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

அத்துடன் கசிப்பு காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்கள், கொள்கலன்களும் கைப்பற்றப்பட்டன. (ம-14,19)



## திருமண வெடிகளால் பதற்றமடைந்த மக்கள்

### கொடிகாமத்தில் சம்பவம்

தென்மராட்சி, ஓக.18

கொடிகாமம் பகுதியில் நடந்த திருமண நிகழ்வில் இரவுவேளை திடீரென வெடிகள் கொளுத்தப்பட்டதால் அந்தப் பகுதி மக்கள் பெரும் அச்சத்துக்கு உள்ளாகியுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது.

இரவு 7.45 மணியளவில் துப்பாக்கியால் சுடுவது போன்று திடீரென வெடியோசைகள் கேட்டதால் பிரதேச மக்கள் கடும் அச்சத்துக்கு உள்ளாகினர். அந்தப் பகுதியில் உள்ள முதியவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், குழந்தைகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர்.

இந்த விடயம் கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். அனுமதி பெறாது இவ்வாறு வெடிகள் கொளுத்தக் கூடாது என்று அறிவுறுத்திய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வெடிகளைக் கொளுத்துவதற்குத் தடையும் விதித்தார். (எ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கு அம்மை தடுப்பூசி தற்போது தேவையில்லை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 18

நாட்டில் இதுவரை குரங்கு அம்மை நோயால் பாதிக்கப்பட்ட எவரும் இனங்காணப்படவில்லை. இதனால் அதற்குரிய தடுப்பூசிகளை இறக்குமதி செய்வதற்கு அவசியமில்லை என சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் இப்போது குரங்கு அம்மையும் உலகளவில் பரவி வருகிறது. குரங்கு அம்மை நோய் பரவலை உலகளாவிய சுகாதார அவசர நிலையாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருபவர்களுக்கு இந்த நோய் பற்றி தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு குரங்கு அம்மைத் தொற்றுள்ளவர்கள் சந்தேகிக்கப்பட்டால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். ஆகவே குரங்கு அம்மைக்கான தடுப்பூசிகளை தற்போது இறக்குமதி செய்யும் அவசியம் இல்லை - என்றார். (ச-இ)

# நல்லூர் ஆலயத்தின் கோபுர கலசாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஓக. 18

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள குபேர திக்கு ஸ்ரீ குமார வாசல் கோபுர கலசாபிஷேகம், கார்த்திகை மஹோற்சவமான நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

காலை 6 மணிக்கு கோபுர கலசாபிஷேகப் பூசைகள் ஆரம்பமாகி அதன்பின் முருகப்பெருமான் உள் வீதி உலாவந்து குமார வாசலைத் திறந்து கும்பாபிஷேகம் நடைபெற்று குமார வெளியில் திருநடனம் புரிவார் என்று ஆலய நிர்வாகசபை அறிவித்துள்ளது. (ம-14.27)



சாவகச்சேரி வேம்படி கந்தசுவாமி கோயிலில் ஸ்தபதி கி.கலாமோகனால் உருவாக்கப்பட்ட புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நேற்றுமுன்தினம் சிறப்பாக இடம்பெற்றது. (ம-14.9)

# போதைப்பொருள்களுடன் போலந்துப் பிரஜை கைது!

கொழும்பு, ஓக. 18

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கொக்கெய்ன் போதைப்பொருளுடன் போலந்துப் பிரஜை ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொலம்பியாவில் இருந்து கட்டார் ஊடாக நாட்டுக்கு வந்த குறித்த நபரை சோதனையிட்ட சுங்க அதிகாரிகள், அவரது பயணப்பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 கிலோவுக்கும் அதிகமான கொக்கெய்ன் போதைப்பொருளை மீட்டனர். அந்தப் போதைப்பொருள் சுமார் 240 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடையது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த நபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப்பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று சுங்க அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (ம-14.இ)

# வர்த்தக நிலையங்களில் சிறப்புச் சோதனைகள்!

கொழும்பு, ஓக. 18

இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ள நிலையில், வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வர்த்தக நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்கும் நோக்கிலேயே இந்தச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று கூறப்படுகின்றது. நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் இந்தச் சோதனை நடவடிக்கைகள் பல்பொருள் அங்காடிகள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்படும் என்று நுகர்வோர் விவகார அதிகார சபையை மேற்கோள்காட்டித் தகவல் வெளியாகியுள்ளது. (எ-இ)

# உதிரிப்பாகங்கள் இன்றி காத்திருக்கும் ரயில்கள்!

கொழும்பு, ஓக. 18

என்ஜின் ஒயில் மற்றும் உதிரிபாகங்கள் தட்டுப்பாடு காரணமாக 20 ரயில்கள் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளன என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதனால் வழக்கமான நேர அட்டவணையின்படி இயங்கும் ரயில்கள் அதிக எண்ணிக்கையான பயணிகளை ஏற்றிச்செல்ல வேண்டியுள்ளது - என்று ரயில்வே பிரதி பொதுமுகாமையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இன்ஜின் ஒயிலை உடனடியாக இறக்குமதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-இ)

# பிள்ளையானின் அலுவலகத்தில் கைக்குண்டு

மட்டக்களப்பு, ஓக. 18

நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் அலுவலகக் கூரையிலிருந்து இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏறாவூர் பகுதியில் வீடொன்றில் நடத்தப்பட்டு வரும் அலுவலகத்திலேயே குறித்த கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

அண்மையில் குறித்த அலுவலக வீட்டின் உரிமையாளர் மேற்கூரையை சீர்செய்த போதே இவை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதையடுத்து குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் இரண்டு கைக்குண்டுகளையும் கைப்பற்றினர். (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நண்பர்கள் வழியே பிரச்சினை உருவாக வாய்ப்பிருப்பதால் எச்சரிக்கை அவசியம். மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். பிறரிடம் விழிப்புணர்வுடன் இருப்பது நல்லது. மன துக்கினிய சம்பவம் நடக்கும்.

**இடபம்:** ஆடம்பர செலவால் தடுமாற்றம் அடைவீர்கள். குடும்பத்தில் நெருக்கடி ஏற்படும். அலுவலகத்தில் செல்வாக்கு உயரும். நீங்கள் விரும்பிய ஒன்றை இன்று அடைவீர்கள்.

**மிதுனம்:** மற்றவர்களால் செய்ய முடியாத ஒரு செயலை நீங்கள் செய்து முடிப்பீர்கள். நீண்ட நாள் முயற்சி ஒன்று நிறைவேறும். அரசு வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கடகம்:** உங்களுடைய செயல் இன்று வெற்றி பெறும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். பணியில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு உண்டாகும். புதிய தொழில் தொடங்குவீர்கள்.

**சிம்மம்:** வழக்கமான செயல் இழுபறியாகும். அரசு வழியிலான எதிர்பார்ப்பு ஒன்று நிறைவேறும். உடல் நிலை குறித்த பயம் நீங்கும். வேலையில் துணிச்சலுடன் செயற்பட்டு வெற்றி அடைவீர்கள்.

**கன்னி:** உங்களுடைய முயற்சி தடைபடும். மனதில் இனம் புரியாத குழப்பம் உண்டாகும். எதிர்பாராத பிரச்சினைகளை நீங்கள் சந்திப்பீர்கள். [illegible] கவனம் தேவை.

**துலாம்:** செயல்களில் இருந்து வந்த தடை விலகும். பெரியவர்களின் ஆதரவால் விருப்பம் நிறைவேறும். உங்களுடைய முயற்சியில் வெற்றி காண்பீர்கள். அரசு வழியில் இழுபறி ஏற்படும்.

**விருச்சிகம்:** மனதில் புதிய நம்பிக்கை உருவாகும். பிள்ளைகளின் எதிர்காலத்துக்குரிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடத்துவதற்குரிய முன்னேற்பாடு செய்வீர்கள்.

**தனுசு:** இன்று உங்களுடைய கவனம் சிதறினால் சில இழப்புகளை சந்திப்பீர்கள். பணி புரியும் இடத்தில் பிரச்சினைகளை சந்திக்க வேண்டியதாக இருக்கும். அரசு வேலை இழுபறியாகும்.

**மகரம்:** வழக்குகளில் இன்று எதிர்பார்த்த நன்மையைக் காண முடியாமல் போகும். எதிர்பார்த்த ஒன்றை அடைவதில் போராட்டத்தை சந்திப்பீர்கள். உடல்நிலையில் கவனம் தேவை.

**கும்பம்:** நம்பிக்கையுடன் உங்கள் புதிய செயலை ஆரம்பிப்பீர்கள். நிதி நிலை சீராகும். யோசித்து செயற்பட்டு ஒரு முக்கியமான செயலில் வெற்றி. நெருக்கடி விலகும். சூழ்நிலையை சாதகமாக்கிக் கொள்வீர்கள்.

**மீனம்:** தேவையற்ற செலவுகளால் நெருக்கடியைச் சந்திப்பீர். பணம் பல வழி களிலும் செலவாகும். உங்களுடைய பேச்சுக்களால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். விழிப்புணர்வு தேவை. குடும்பத்துக்குள் நெருக்கடி சூழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20 . 05 . 1932



மறைவு
23 . 07 . 2019

## அமரர் அப்புக்குட்டி நாகம்மா

**திதி:– ஸப்தமி (18.08.2022)**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
மூன்றாண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்


ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கருகப்புலம்,
கணேஸ்வரம், அளவெட்டி.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 09 . 1949



மறைவு
17 . 08 . 2022

## பிறான்சீஸ் சேவியர் அருமைநாயகம்

(பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்)

சில்லாலையை பிறப்பிடமாகவும் இல.82 கண்டி வீதி யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பிறான்சீஸ் சேவியர் அருமை நாயகம் அவர்கள் நேற்று (17.08.2022) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிறான்சீஸ் மேரிக்கிளாறா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவவர்களான அந்தோனிப்பிள்ளை லில்லி எலிசபேத் ஆகியோரின் மருமகனும் சரோன் அன்சிலா (HNB), யசோன் இன்பறாஜ் (பிரான்ஸ்), இஜீனா கொன்சலா (ஆசிரியர், சென் பெனடிற் றோ.க.வித்தியாலயம்), ஸ்ரீபன் இருதயராஜ் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் USTPS) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவராமன் (HNB), மரீனா, அர்ஜிகா (பிரான்ஸ்), றூபேந்திரன் (NDB) ஆகியோரின் மாமனாரும் லிவினேஸ், வேணிஷா, சிசிலியா, சிந்தியா, பானுஜன், தீபிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் செல்வநாயகம், சுகிர்தசீலி, புனிதசீலி, மரியநாயகம், தரளசீலி, ராசநாயகம் (சுவிஸ்), ஜீவநாயகம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பேணாட், அருட்சகோதரி ஆன்மேரி A.C, மாலா (ஜேர்மனி), அனிதா (ஜேர்மனி), ஹென்றி றெஜினோல்ட் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (19.08.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரது தற்காலிக இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு சில்லாலை தூய கதிரை அன்னை ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தூய கதிரை அன்னை ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# கட்டடம் வாடகைக்குண்டு

உரும்பிராய் சந்தியில் 4 பரப்பில்
அமைந்து 500 சுதுரஅடி கொண்ட
6 அறைகளுடன கூடிய கட்டடம்
வாடகைக்குண்டு.
களஞ்சிய சாலைகளாகவோ or
பல்பொருள் அங்காடியாகவோ
(Supcr Market)

**077 902 2285**

## அணுத் தாக்குதலுக்கு திட்டம்

உக்ரைனில் ரஷ்யா அணுவாயுதத் தாக்குதல்களுக் குத் திட்டமிட்டுள்ளது என்று எச்சரித்துள்ளார் உக்ரை னின் அதிபர் ஷெலன்ஸ்கி.

உக்ரைனில் அணுவாயுத மோதலொன்று ஏற்படுவதற் கும் அணுவாயுதத்தை மையமாகக் கொண்ட அழிவு உக்ரைனில் ஏற்படுவதற்கும் ரஷ்யா காரணமாக இருக் கப்போகின்றது. அதைநோக்கித்தான் ரஷ்யா இந்தப் போரைத் திருப்புகின்றது என்று ஷெலன்ஸ்கி மேலும் தெரிவித்தார். (ம)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பின்வரும் இடங்களில் காணப்படும் பாவனையில் இல்லாத அலுவலக தளபாடங்கள், கணனி உபகரணப்பொருட்கள் மற்றும் பாவிக்கமுடியாத / பாவனைக்குத் தேவைப்படாத பொருட்களை பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏலவிற்பனைக்குரிய பொருட்கள் தொடர்பான விபரங்களை பல்கலைக்கழக பொதுநிர்வாகக்கிளையுடன் தொடர்புகொண்டு பின்வரும் தினங்களில் காலை 10.00 மணியிலிருந்து மாலை 02.00 மணிவரை குறித்த நாட்களில் பார்வையிடலாம்.

**ஏலவிற்பனை நடைபெறும் இடங்கள்.**

| இல | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஏலப்பொருட்கள் | ஏலப்பொருட்களை பார்வையிடும் நாட்கள் | ஏலவிற்பனை நடைபெறும் திகதி / காலம் |
|---|---|---|---|---|
| 01 | மருத்துவபீடம் | • கணனி உபகரணப் பொருட்கள்<br>• தளபாடங்கள்<br>• ஆய்வுகூடப்பொருட்கள் | 23.08.2022<br>24.08.2022 | 29.08.2022<br>திங்கட்கிழமை<br>மு.ப. 09.30 மணி |
| 02 | பல்கலைக்கழக பிரதான வளாகம் | • கணனி உபகரணப் பொருட்கள்<br>• தளபாடங்கள் | 23.08.2022<br>24.08.2022 | 29.08.2022<br>திங்கட்கிழமை<br>மு.ப. 11.00 மணி |
| 03 | இராமநாதன் நுண்கலைத்துறை | • கணனி உபகரணப் பொருட்கள்<br>• தளபாடங்கள்<br>• இசைக்கருவிகள் | 23.08.2022<br>24.08.2022 | 29.08.2022<br>திங்கட்கிழமை<br>பி.ப. 01.00 மணி |

ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்புவர்கள் அனுமதிக் கட்டணமாக ரூபா 2000.00ஐ பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் 970000440001846 என்ற கணக்கிலக்கத்திற்கு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். என்ற பெயரில் வைப்புச்செய்த பற்றுச்சீட்டுடன் உரிய விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பித்து சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக ஏலப்பொருட்களை பார்வையிடுவதுடன் ஏலத்திலும் கலந்து கொள்ளலாம்.

ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர்கள் பொருட்களைப் பார்வையிட்ட பின்னர் மீளளிப்பு செய்யக்கூடிய வைப்புத் தொகையாக ரூபா 15,000.00 ஐ 970000070000282 என்ற கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து செலுத்திய பற்றுச்சீட்டினை 24.08.2022 மாலை 4.00 மணிக்கு முன்னர் நிர்வாகக்கிளையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்காட்டிய திகதியில் நடைபெறும் ஏலவிற்பனையில் வெற்றியடைந்தவர்கள் ஏலத்திற்குரிய தொகையினை பணமாகச் உடன் செலுத்தி பொருட்களை முழுமையாக உடன் எடுத்துச்செல்லுதல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-08 கொழும்புத்துறை வீதி ஆதன இல 236/ 13 என்ற இலக்கத்தை உடைய ஆதனமானது சம்பந்தர் மாணிக்கவாசகர Dr. வெற்றிவேல் என்ற பெயரில் யாழ்ப்பாணம் மாநகரசபை ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படு கின்றது.

அதனடிப்படையில் எமக்கு சமர்ப்பிக்கப்பட்ட உறுதிகளில் பிரசித்த நொத்தாரிசு சி. இளங்கீரன் முகதாவில் 2012.08.29 ஆம் திகதி யாழ்ப்பாணம், இராசாவின் தோட்ட வீதி தற்காலம் ஐக்கிய அமெரிக்க தேசத்தில் வாழ்ந்து வரும் டாக்டர் வெற்றிவேலு மகேஸ்வரனின் அற்றோனித் தத்துவக்காரன் தில்லையம்பலம் சிறீதரன் மூலம் வெளிப்பட்டு யாழ்ப்பாணம் கொழும்புத்துறை மேற்கு கந்தர் மணியர் வீதியைச் சேர்ந்த வைத்திலிங்கம் கிருபாகரனுக்கு அறுதியாக வழங் கப்பட்டுள்ளது.

அவ் உறுதியில் இவ் ஆதனங்கள் 1934 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ம் திகதி பிரசித்த நொத்தாரிசு பி.காசிப்பிள்ளை முன்பாக 530ம் இலக்கத்தில் தனது பெற்றோர் காலஞ்சென்றவர்களான சண்முகம் அப்பாக்குட்டி வெற்றிவேலுவும் பெண் பராசக்தியும் ஆகியவர்களுக்கு நிறைவேறிய அறுதி உறுதியால் தனக்கடைந்த உரித்தும் தனதாட்சியுமானதும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இவ்வுறுதி தொலைந்துவிட்டதாக யாழ்ப்பாண மாவட்ட காணிப்பதிவாளர் ஒப்பமிட்ட கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த ஆதனத்தை வைத்திலிங்கம் கிருபாகரன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு J.S.A மதுரநாயகம் முகதாவில் 2016.05.04 ம் திகதி 2610ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் ஜேசுதாசன் ஜோய்ஸ் நியூட்டன் உம் பெண் சுதர்சினி உம் என்பவர்களுக்கு அறுதியாக வழங்கியுள்ளார். அதன்பின் ஜேசுதாசன் ஜோய்ஸ் நியூட்டனும் பெண் சுதர்சினியும் என்பவர்கள் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 25.04.2019 ம் திகதி 10640 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் செபஸ்ரியாம்பிள்ளை அன்ரன் நவராசாவும் பெண் ஞானலட்சுமிக்கும் அறுதியாக வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை :-**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணம் மாநகரசபை, யாழ்ப்பாணப் பிரதேச செயலகம், கிராம அலுவலர் பிரிவு J/62, சுண்டிக்குளி இறை "ஆசைவளவும் திடலிற்புலமும்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் அ.சந்தியாம்பிள்ளை அவர்களால; 22.08.1979 திகதி அளந்து 1-8 துண்டுகளாக பிரிவிட்டு தயாரித்த இலக்கப் படத்தில் துண்டு 8 எனச்சுட்டப்பட்ட பாகம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 5 குளி 12.7 இதனை உத்தரவு பெற்ற நில அளவையாளர் பி.புஸ்பராஜா அவர்களின் 20.04.2019ம் திகதி அளந்து 1-4 துண்டுகளாக பிரிவிட்டு தயாரித்த இலக்கப் படத்தின்படியும் ஆட்சியின்படியும் விஸ்தீரணம் நிலப்பரப்பு 5 குளி 11.98. குறித்த 6361 இலக்கப்படத்தில் துண்டு 3 எனச் சுட்டப்பட்ட பாகம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 9 மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும். இதன் எல்லை

| | | |
|---|---|---|
| கிழக்கு | - | குறித்த 636Iம் இலக்கப்படத்தில் துண்டு 4 எனச்சுட்டப்பட்ட பாகம் |
| வடக்கும் மேற்கும் | - | குறித்த 6361 இலக்கப்படத்தில் துண்டு 1 எனச்சுட்டப்பட்ட 12 அடி அகலமான அணுகுவழிப் பாதை |
| தெற்கு | - | குறித்த 6361ம் இலக்கப்படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்ட பாகம் இதடங்கலும் |

தற்போது செபஸ்ரியாம்பிள்ளை அன்ரன் நவராசாவும் பெண் ஞானலட்சுமியும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு ஆதனவரி பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு / முழுவதிற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது செபஸ்ரியாம்பிள்ளை அன்ரன் நவராசாவும் பெண் ஞானலட்சுமியும் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(cr.37573) (3.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு...

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் கல்வி அமைச்சின் மூத்த உதவிச் செயலராகவும், உள்ளூராட்சி அமைச்சின் பதில் செயலராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.
வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளராக பதவி வகித்த மு.நந்தகோபாலன் கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். திருமதி தேவநந்தினி பாபு கூட்டுறவு ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஆணையாளராக செ.பிரணவநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் 24ஆம் திகதியிலிருந்து இட மாற்றங்கள் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## இந்து...

உலங்குவானூர்தி மூலம் தீவிர கண் காணிப்பில் ஈடுபட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.
கடற்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்திகள் இராமேஸ்வரம், தனுஷ்கோடி கடல் பகுதியில் தாழ்வாகப் பறந்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. இந்தியாவின் கடும் எதிர்ப்பையும் மீறி, சீனத் தொழில்நுட்ப ஆய்வுக் கப்பல் இலங்கையில் நிறுத்தப்பட்டுள்ளதால், இந்தியக் கடற்படை கண்காணிப்பை அதிகரித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. (ஒ-இ)

# மரண அறிவித்தல்

## குமாரசாமி புண்ணியமூர்த்தி

**(இளைப்பாறிய பிரதம கணக்காய்வாளர், மாவட்ட செயலகம், மாத்தளை. கௌரவ பொருளாளர், மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்)**

**தோற்றம் : 21.05.1937** **மறைவு : 15.08.2022**



நெடுந்தீவு மத்தியைப் (காரை வளவு) பிறப்பிடமாகவும், கொங்காவல வீதி, மாத்தளையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி புண்ணியமூர்த்தி அவர்கள் கடந்த (15.08.2022) திங்கட்கிழமை மாத்தளையில் காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் தயாவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற குமாரசாமி, நாகமுத்து தம்பதியரின் மகனும், Dr.அருணா (மாவட்ட வைத்தியசாலை, மாத்தளை), சசிகலா (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.ஆனந்தி (மாவட்ட வைத்தியசாலை, மன்னார்) அவர்களின் அன்பு மாமனாரும், கனிஸ்கரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பரராசசிங்கம் மற்றும் குணநாயகம், சொர்ணம்மா கமலாம்பிகை (UK), லிங்கநாயகம், கோபாலகிருஸ்ணன் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2022) வெள்ளிக்கிழமை மாத்தளையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 10.00 மணியளவில் மாத்தளை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**Dr.சு.சிவபாதமூர்த்தி-0773 155 100**
(மருமகன்)

(CS 20341)1-6

# மரண அறிவித்தல்

## சுந்தரலிங்கம் கனகலட்சுமி (பூங்கா)

**(ஓய்வுநிலை உப அதிபர்
யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)**



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம் குமாரசாமி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் கனகலட்சுமி நேற்று (17.08.2022) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்) அவர்களின் அன்பு மனைவியும், கஜனன் (கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற உத்தியோகத்தர்), மகீசனன் (ஒஸ்ரியா) ஆகியோரின் அன்புத் தாயும், சிவகாமியின் அன்பு மாமியும், காலஞ்சென்ற இராசலட்சுமி மற்றும் கனகரத்தினம், குணபூசணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் நடராசலிங்கம், இராசலிங்கம், யோகலட்சுமி, தியாகலிங்கம், மகாலட்சுமி, சந்தானலட்சுமி, சிறீதரலிங்கம், விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2022) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**31, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 6365 949**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 20339)1-6

# மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 03 . 1947



மறைவு
15 . 08 . 2022


## திருமதி துரைராஜா கௌரீஸ்வரி

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரைராஜா கௌரீஸ்வரி 15.08.2022 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் இராசரத்தினம் பாக்கியம் அவர்களின் பாசமிகு மகளும் உடுவில் கிழக்கு கற்பக பிள்ளையார் கோயிலடியை சேர்ந்த காலஞ்சென்ற வைரமுத்து துரைராஜாவின் அன்பு மனைவியும், வைரமுத்து சுப்பிரமணியம், வைரமுத்து சின்னத்தம்பி ஆகியோரின் மைத்துனியும் அமரர் தவராசா (அப்புத்துரை), சிவகுருநாதன் (ராசன்) அவர்களின் சகோதரியும் உருத்திராதேவி, கமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் கமலாதேவி, விமலாதேவி, விமலநாதன், நகுலநாதன், கவிதா, காஞ்சனா ஆகியோரின் பாசமிகு தாயாரும் கணபதிப்பிள்ளை, குலநாதன், மஞ்சுலா, காஞ்சனா (சுமதி) சிவகுமார், பாஸ்கரன், தசிகா, யாழினி, வாணி, சுதன், குஞ்சன், நிசா ஆகியோரது மாமியும் சுரேன், தட்சாயினி, பிரசன்னா, பிரசாந், அபிராமி, விஸ்வா, மகிசா, தனுஷ், அனுஸ்கா, சாருகா, சோபிகா, அனிக்கா, சிவநயனி, அக்ஷ்யன், மிதுசன், மிதுசனா ஆகியோரின் பேர்த்தியும் பிரனணி, கெயர்சி, சாகர், ஆதித்தன், சிர்த்தாத், வித்தியசிறி, ஜனபவன், ரிதிசிகா, றிஸ்னிகா ஆகியோரின் பூட்டியும் மோகனலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் சிறிய தாயாருமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.08.2022 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 09 . 1942



மறைவு
16 . 08 . 2022

## கந்தன் நாகராசா

B.A (Cey),M.A (Kelaniya), TKT Cambridge, ஓய்வுபெற்ற விரிவுரையாளர் கிழக்குப் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம் மட்டக்களப்பு) Director of British College of English
சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் நாகராசா கடந்த (16.08.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி.கந்தன் முத்தாச்சி தம்பதியரின் மகனும்.காலஞ்சென்றவர்களான திரு.திருமதி இராசையா தெய்வானை தம்பதியரின் மருமகனும், திருமதி தங்கரட்ணம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், யோகலீலா, காலஞ்சென்ற யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சத்தியரூபன் (GC, வவுனியா), சத்தியகுணாளன் (பொறியியலாளர் - லண்டன்), பிரியதர்ஷினி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), சாயிதர்ஷினி (யா/நாவாந்துறை றோ.க வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சுதர்சினி (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்), அறிவரசி (லண்டன்), கிறிஸ்ரி றொபின் (தாதிய உத்தியோகத்தர்.யாழ்.போதனா வைத்தியசாலை), இராஜவேல் (ஆயுள் வேத வைத்தியர்) ஆகியோரின் மாமனாரும், ஹபிஷாந், ஹேசாயிநாத், சாயிசரண், யுசிக்கா, சிந்தூரிக்கா, லினேசாயி, துஷியா, மாதுரி ஆகியோரின் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.08.2022) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**விலானை வீதி,
உரும்பிராய்.**

**076 6701 509**

தகவல் :
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 ஆண்களுக்கும்...

விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன், வீட்டைவிட்டு வெளியேறி துர்நடத்தையில் ஈடுபட்ட சிறுமிகள் இருவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் கட்டளையிட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டதாவது:-

இரண்டு வாரங்களுக்கு முன்னர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 17 வயதுச் சிறுமிகள் இருவர் வீட்டிலிருந்து வெளியேறி வந்து யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் இருந்துள்ளனர். அவர்கள் தொடர்பில் அறிந்த ஆண் ஒருவர், சிறுமிகள் இருவரையும் அழைத்துச் சென்று சாவகச்சேரியில் உள்ள விடுதியில் தங்கியுள்ளார். எனினும் கடந்த திங்கட்கிழமை அந்த விடுதியிலிருந்து வெளியேறிய மூவரும் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு வந்துள்ளனர்.

அன்றைய தினம் இரவு வாகனம் ஒன்றில் பேருந்துச் சாரதிகள் இருவர் நடத்துநர்கள் இருவர் என மேலும் நால்வர் இணைந்து வாகனம் ஒன்றில் எழுதுமட்டுவாழ் பற்றைக் காட்டுக்குள் அழைத்துச் சென்றுள்ளனர். அதன்போது சிறுமி ஒருவர் சாதூரியமாகப் பேசி வாகனத்திலிருந்து இறங்கி எழுதுமட்டுவாழில் மக்கள் வாழும் பகுதிக்கு வந்துள்ளார். வீதியில் சென்றவர்களிடம் நடந்தவற்றை தப்பி வந்த சிறுமி தெரிவித்த நிலையில் பொலிஸ் அவசரப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது.

சிறுமிகளிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர்களை கடத்திச் சென்றமை மற்றும் தகாத உறவு கொண்டமை என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் ஐவர் கைது செய்யப்பட்டனர். வீட்டை விட்டு வெளியேறி வந்து துர்நடத்தையில் ஈடுபட்டமையால் சிறுமிகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (அ-ஒ-26)

## இராமநாதன்...

பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடமாக' தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தவால் கடந்த 16ஆம் திகதி கையொப்பமிடப்பட்டு, அதி சிறப்பு வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ளது. (ஒ-5)

## எதிரணியிலிருந்து...

கின்றனர் - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபயவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிரணியில் இருந்து வரும் உறுப்பினர்களையும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள உறுப்பினர்களையும் இணைத்துக்கொண்டு பலமான அரசாங்கத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறுவவுள்ளார்.

அந்த அரசுக்கு சர்வகட்சி அரசாங்கம், சர்வகட்சி ஆட்சி, தேசிய அரசு ஆகிய மூன்று பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. எனவே, பலமிக்க அரசாங்கத்துக்கு இந்த மூன்று பெயர்களில் ஒரு பெயரை அதில் அங்கம் வகிக்கவுள்ள உறுப்பினர்களின் சம்மதத்துடன் ஜனாதிபதி சூட்டுவார்.

அனைத்துக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு அசைக்க முடியாத அரசாங்கத்தை நிறுவுவதே ஜனாதிபதியின் விருப்பம். இதற்காகப் பல கட்சிகளை அவர் தனித்தனியே சந்தித்தும் பேச்சு நடத்தியுள்ளார். எனினும், சில கட்சிகள் இழுத்தடிப்புக்களைச் செய்கின்றன. சர்வகட்சிகளை உள்ளடக்கிய தேசிய வேலைத்திட்டத்துக்குக்கூட சில கட்சிகள் நிபந்தனைகளை விதிக்கின்றன.

மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியால் சிக்குண்ட நாட்டை உடனடியாக மீட்டெடுக்க வேண்டும். இது கட்சி அரசியல் செய்யும் நேரமல்ல.

எனவே, காலத்தை வீண்விரயம் செய்யாமல் சேர விரும்பும் உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு பலமிக்க அரசாங்கத்தை நிறுவி பொருளாதாரப் பிரச்சினை உள்ளிட்ட தேசிய பிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வுகளைக் காணும் பயணத்தை ஜனாதிபதி உடனடியாக ஆரம்பிக்கவுள்ளார் - என்றார். (அ-ஒ-5-22)


# மரண அறிவித்தல்

## திரு.கார்த்திகேசு ஜெயராஜசிங்கம்

(எஞ்சினியர்)

**தோற்றம் : 03.03.1938** **மறைவு : 16.08.2022**



உடுவிலைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு ஜெயராஜசிங்கம் கடந்த (16.08.2022) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு லில்லி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குக்குபண்டா விஜயசூரிய - வெரோனா ஆகியோரின் அன்பு மருமகனும், எமிலின் விஜயசூரியவின் அன்புக் கணவரும், கிறிஸ்ரா, நீல், நோயல் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மேரி திரேசா, காலஞ்சென்ற டெய்சி, லீலா, பெளிசியா சின்றல்லா, அரசகுலசிங்கம், ஜெய சீலியா, போஷியா, பற்றீஷியா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (18.08.2022) வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் ப(B)த்தகான சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கொக்கொஸ் கொட், உடுவில், சுன்னாகம்,**
**077 900 6914 - பற்றீசியா (சகோதரி)**
**077 613 5393 - ஜெபரஞ்சன் (மருமகன்)**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 20342)1-6

# மரண அறிவித்தல்



## கந்தையா செல்லத்துரை

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் இல.99/50, சிவன் கோவில் வீதி தோணிக்கல்லை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லத்துரை 17.08.2022 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா மாரிமுத்து தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை மாரிமுத்து தம்பதியரின் மருமகனும் செல்லம்மாவின் கணவரும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, ஐயம்பிள்ளை, சரஸ்வதி, சண்முகம், பூங்காவனம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான செல்லையா, இரத்தினம், தர்மலிங்கம், புஸ்பவதி, சோமசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அருட்செல்வி, கலைச்செல்வி, சிவச்செல்வி, சிவாகரன் ஆகியோரின் தந்தையும் தர்மராசா, அகிலன், குணபாலசிங்கம் (பாலவிநாயகர் மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்), தர்மிகா ஆகியோரின் மாமனாரும் சயந்தன், நிதுசன், ரஜித், கஜீவன், ஷதுர்சனா, தனுசாந், துஷானன், சுயானா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தோணிக்கல் பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி



மண்கும்பானைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் கந்தையா செல்லத்துரை

**அவர்கள்**

நேற்றிருந்தார் இன்றில்லை
நிலையிது இயற்கை யாகும்!
ஆற்றிடாது அழுதிடுவார்
அமைதிபெறல் ஒன்றே தான்
தேற்றும்வழி! அன்னாரின் ஆத்மா
தெய்வநிழல் அடைக சாந்தி!

**அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

| | |
|---|---|
| உரிமையாளர்<br>புதிய நதியா நகைமாடம் | உரிமையாளர்<br>பால விநாயகர் மோட்டோர்ஸ் |
| உரிமையாளர்<br>கந்தவேல் ரேடர்ஸ் | உரிமையாளர்<br>மைதிலி நகைமாடம் |

**கவிஞர் வேலணையூர் சுரேஷ்**

(CS) 1/6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலைப் பற்றி எனக்குத் தெரியும் என்னைப் பற்றி ரணிலுக்கும் தெரியும்

## 'கவுண்டமணி' பாணியில் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 18
புதியஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவும் நானும் ஐந்து வருடங்கள் ஒன்றாகப் பணியாற்றியுள்ளோம். எனவே, அவரைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். என்னைப் பற்றியும் அவருக்கு நன்கு தெரியும் - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிராமங்களை எடுத்துக்கொண்டால் விவசாயக் காணிகளில் இருப்பவற்றைப் பறித்து சமைத்து உண்ணும் வாய்ப்பு கிராம மக்களுக்கு இருக்கின்றது. நகரப் புறங்களில் அவ்வாறு இல்லை.

நாட்டின் பொருளாதாரம் பெரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. கல்வித்துறையும் வீழ்ச்சியடைந்துவிட்டது. சுகாதாரத் துறையை எடுத்துக்கொண்டால் போதிய மருந்துகள் இல்லை. வெளிநாடுகளிடமிருந்து மருந்துகளை விலைக்கேனும் கொள்வனவு செய்ய முடியும்.

ஆனால், விசேட மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறுவது என்பது தீவிரமான நிலைமையாகும். நாட்டில் அத்தியாவசிய சேவையை ஆற்றிவந்தவர்களே இவ்வாறு நாட்டிலிருந்து வெளியேறிவருகின்றனர். கடந்த இரண்டரை வருடங்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தங்களது குடும்பத்தாருடன் வெளியேறி வருகின்றனர்.

நாட்டில் மகிழ்ச்சியடைக்கூடிய விடயங்கள் என்று கூறிக்கொள்வதற்கு ஒன்றும் இல்லை.

அரசு முன்னெடுக்கும் சிறந்த விடயங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவே நாட்டின் தற்போதைய ஜனாதிபதிக்கு நாங்கள் தெரிவித்துள்ளோம். நாங்கள் உடன்படாத விடயங்கள் அரசால் முன்னெடுக்கப்பட்டால் அதற்கு எதிர்ப்பை தெரிவிப்போம் என்றும் நாம் கூறியுள்ளோம்.

நாடு தற்போது எதிர்கொண்டு இருக்கும் நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் அரசியல்வாதிகளின் கடந்த காலங்களை விமர்சிப்பது அவசியமற்ற ஒரு விடயமாகும் - என்றார். (அ-ஓ-22)

# 'ஒரே நாடு ஒரே சட்டம்' ஒரே குப்பை!

கொழும்பு, ஓக. 18
பொதுபல சேனாவின் பொதுச் செயலர் ஞானசார தேரர் தலைமையிலான 'ஒரு நாடு ஒரு சட்டம்' ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில்லை என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டில் உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டிய பல பிரச்சினைகள் காணப்படுவதாலும், பல தரப்பினரின் எதிர்ப்புகள் காரணமாகவும் அரசாங்கம் 'ஒரு நாடு ஒரு சட்டம்' ஜனாதிபதி ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில்லை என தீர்மானித்துள்ளது. (அ-ஓ-இ)

# பஸிலின் கையிலேயே நாட்டில் இப்போதும் ஆட்சி

## உள்வீட்டு இரகசியங்களை கக்குகிறார் டிலான் எம்.பி.

கொழும்பு, ஓக. 18
கப்புட்டாவின் (பஸில்) ஆலோசனையின் பிரகாரமே நாட்டில் ஆட்சி நடக்கின்றது. எனவே, 'கப்புடா'வை (காகம்) தேசியப் பறவையாக அறிவித்தால்கூட ஆச்சரியமில்லை - இவ்வாறு சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் கூறுகையில்;

விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். உரப்பிரச்சினையால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது. இவற்றுக்குத் தீர்வைத் தேடாமல், தேசிய விலங்கான மர அணிலை மாற்றவேண்டும் என யோசனை முன்வைக்கப்படுகின்றது.

நமது நாட்டை கப்புடா (பஸில்)தான் ஆள்கின்றது. எனவே, தேசியப் பறவையாக கப்புட்டாவை அறிவித்தால்கூடப் பரவாயில்லை.

சர்வகட்சி அரசாங்கம் என்ற போர்வையில் அமைச்சரவை எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. மக்கள் இதனை எதிர்பார்க்கவில்லை - என்றார். (அ-ஓ-22)

# இலங்கையர் ஒருவருக்கு மாதாந்தம் ரூ. 12, 444 போதுமாம்

கொழும்பு, ஓக. 18
இலங்கையில் தனிநபரொருவர், ஒரு மாதத்துக்கு வசிப்பதற்கு சராசரியாக 12 ஆயிரத்து 444 ரூபா போதுமானது என தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த ஜூன் மாதத்துக்கான அறிக்கையின்படி இந்தத் தொகை போதும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஓ-இ)



# புலம்பெயர்ந்தோருக்கு கொழும்பில் அலுவலகம்

## தடை நீக்கத்தை தொடர்ந்து ரணிலின் அடுத்த முயற்சி

கொழும்பு, ஓக. 18
இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிப்போரின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்காக புலம்பெயர்ந்தோருக்கான அலுவலகம் இலங்கையில் அமைக்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். நாட்டை மீட்பதற்கான பல்வேறு வேலைத்திட்டங்களில் ஒன்றாக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஓ-22)

### லாப்ஸ்...

ஆயிரத்து 50 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. நேற்று முதல் இது நடைமுறைக்கு வருவதாக லாப்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. இதனையடுத்து புதிய லாப் சிலிண்டரின் விலை 5 ஆயிரத்து 800 ரூபாவாக விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை - 5 கிலோ கிராம் சிலிண்டர் 2 ஆயிரம் 320 ரூபாவாகவும், 2 கிலோ கிராம் சிலிண்டர் 928 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது. (அ-ஓ-இ)

### நாடு...

வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வுத்திணைக்களத்துக்கு நேற்று வந்த உதயங்க வீரதுங்க அங்கிருந்து வெளியேறும் போதே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். (அ-ஓ-இ)

### போதை...

கோப்பாயைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் ஐயர் கணநாதசர்மா (வயது - 34) என்பவரே ,திருநெல்வேலியிலுள்ள நண்பரின் வீட்டுக்குச் சென்றபோது, அங்கு கதிரையில் அமர்ந்து சிறிது நேரத்தில் மயங்கிச் சரிந்து உயிரிழந்திருந்தார்.

அவரது உயிரிழப்புக்கான காரணத்தைக் கண்டறிய உடற்கூற்றுப் பரிசோதனை யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. கையில் ஊசி மூலம் போதைப் பொருளை செலுத்தியமையாலேயே உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்று பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு ஊசி மூலம் போதைப் பொருள் ஏற்றிய 7 பேர் கடந்த 3 மாதங்களுக்குள் யாழ்ப்பாணத்தில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-26-27)

### தக்க...

வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிட அனுமதி வழங்கப்பட்ட சீனாவின் ஏவுகணை மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்பு கப்பலான, யுவான்வாங்-5 பற்றிய கேள்வி ஒன்றுக்கே அவர் இந்தப் பதிலை வழங்கியுள்ளார்.

'இந்தியா தனது தேசிய நலன்களைப் பாதுகாக்க வேண்டும். எனினும் பிராந்தியத்தில் ஏகபோக உரிமை கோர முடியாது. இலங்கைக்கு சீனக் கப்பல் சென்றுள்ளதால்உருவாகியுள்ளசூழ்நிலையை இந்தியா உன்னிப்பாக அவதானிக்கின்றது. எங்கள் அயலில் எங்கள் பாதுகாப்பு மீது தாக்கத்தை செலுத்தக்கூடிய என்ன சூழ்நிலை உருவானாலும் அது எங்களின் கரிசனைக்குரிய விடயம். இந்தியாவின் அண்டை நாடுகள் கலாசார ரீதியாக வசதியாகவும், பொருளாதார ரீதியாகவும் நெருக்கடியில் உள்ளன. இந்த நிலையில் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் சர்வதேச நாணய நிதியத்தை சமாளிப்பதற்கு இலங்கைக்கு உதவிய ஒரே அண்டை நாடு இந்தியா மட்டுமே' - என்றார் ஜெய்சங்கர். (அ-ஓ-இ)

### தொடர்...

னர். அங்கு தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எந்தவொரு பாதிப்பும் இந்தத் தாக்குதல்களால் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று மாநிலங்களில் உள்ள அத்தியாவசியப் பொருள்களை விற்கும் கடைகள், ஒரு பெற்றோல் நிலையம் ஆகியவற்றைக் குறிவைத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அந்நாட்டு பொலிஸாரும் இராணுவமும் வெளியிட்ட அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. தாக்குதல்களுக்கு யாரும் இதுவரை பொறுப்பேற்கவில்லை.

இதேவேளை- நேற்றுமுன்தினம் நள்ளிரவு சந்தேகநபர் ஒருவர் எரிபொருள் நிரப்பும் நிலையம் மற்றும் வர்த்தக நிலையம் ஒன்றுக்குள் நுழைந்து கறுப்பு பை ஒன்றை அங்கு வைத்து விட்டுச் சென்றுள்ளார். அத்துடன் சாவதற்கு விரும்பவில்லை என்றால், அங்கிருந்து வெளியேறுமாறு ஊழியர்களையும் எச்சரித்துள்ளார். ஊழியர்கள் அங்கிருந்து வெளியேறி 10 விநாடிகளுக்குப் பின்னர் குண்டு வெடித்துள்ளது.

தாய்லாந்தின் தெற்குப் பகுதிகள் சிலவற்றில் பல ஆண்டுகளாகக் கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்களை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-5)

### 3 அரச...

பிரிட்டன் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

'அரசாங்க நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும்போது தொழிற்சங்கங்கள் எதிர்த்தால் அவை பற்றி கவலைப்படப் போவதில்லை. மக்களே எனக்கு முக்கியமானவர்கள்' என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று நிறுவனங்களை விடவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தையும் தனியார் மயப்படுத்துவது தொடர்பில் ஆராய்வதாகவும்அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(அ-ஓ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடினமான...

கொழும்பு, சினமன் லேக்சைட் ஹோட்டலில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற 'தொழில் வல்லுநர்கள் சங்கங்களின் சம்மேளனம் ஏற்பாடுசெய்த 2022' விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதிஇதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு இதுவரை சந்தித்திராத மிகவும் ஆபத்தான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டே இன்று இந்த விருது வழங்கும் விழாவில் பங்கேற்கிறோம். 2017ஆம் ஆண்டில் நமது பொருளாதாரம் வளமாக இருந்தது. ஆனால், பல்வேறு விடயங்களால் அது பாதிக்கப்பட்டது. 52 நாள் அரசாங்க காலத்தின் அந்த இடைவெளி, ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதலின் தாக்கம், 2019 அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணங்களால் வரி குறைப்பு மற்றும் 2020 இல் கொரோனாப் பெருந்தொற்று உள்ளிட்ட காரணங்கள், இரசாயன உரங்களின் இறக்குமதியை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்ட முடிவு மற்றும் செயற்கையாகப் பணமாற்று விகிதத்தைக் கட்டுப்படுத்தியதால், இலங்கை நெருக்கடியான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது.

### இயல்புக்கு திரும்புகிறோம்

நாங்கள் மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பி வருகிறோம். நிலைமை, கிட்டத்தட்ட இயல்புநிலைக்குத்திரும்பியுள்ளது. நான் மீண்டும் அவசரநிலையை நீட்டிக்க மாட்டேன். நாம் 2019 -2020 காலப்பகுதிக்கு பின்னோக்கித் திரும்ப முடியாது. நமது அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் இந்த நாட்டுக்கு எதிர்காலம் உண்டு. இல்லையெனில், நாம் மற்றொரு லெபனானாக மாறுவோம்.

### இலங்கையைவிட நான் பணக்காரன்

பொருளாதாரம் எவ்வளவு மோசமாகவுள்ளது என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. நான் நிதியமைச்சராக பதவியேற்றதும் அந்நியச் செலாவணியில் இலங்கை என்ற ஒரு நாட்டை விடவும் நான் பணக்காரன் என்பதை உணர்ந்துகொண்டேன். என் வீட்டில் ஆயிரம் டொலர் சேமிப்பில் உள்ளது. அதன்படி, நான் நாட்டை விட ஆயிரம் மடங்கு பணக்காரன். அதுதான் யதார்த்தம். இப்போது நாம் பொருளாதார உறுதிப்பாட்டை உருவாக்க வேண்டும். நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி வருகிறோம். பணிக்குழாம் இணக்கப்பாட்டுக்கு இறுதி நிபந்தனைகளைத் தயாரிப்பதற்கு இப்போது இரண்டு குழுக்கள் உள்ளன.

கடன் பொதியொன்றை வழங்கத் திட்டமிட்டு சீனக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு கூடுதல் நிதி உதவி வழங்கவும் தயாராகியுள்ளது. இந்த இலக்குகளை எவ்வாறு அடைவது என்பது குறித்து நாம் ஜப்பானுடன் கலந்துரையாடினோம். நாங்கள் ஏற்கனவே இந்தியாவுடன் பேச்சு ஆரம்பித்துள்ளோம்.

### துன்பப்படப்போகின்றோமா?

நாம் விரைவாகச் செயற்பட்டால், இந்த நெருக்கடி குறுகிய காலமே நீடிக்கும். ஆனால், நாம் தொடர்ந்து விவாதித்துக் கொண்டிருந்தால், அனைவரும் துன்பப்பட வேண்டி ஏற்படும். நாம் மீண்டும் பழைய அரசியலில் ஈடுபட்டுக்கொண்டிருப்பது பழைய முறையைக் கொண்டு வருவதற்காகவா? என்பதுதான் கேள்வி.

முதலில் 22 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவேன். அதன் பின்னர் நாடாளுமன்றத்தை அரசாங்கமாக மாற்ற நாம் முயற்சிப்போம். துறைசார் மேற்பார்வைக் குழு, தேசிய சபை, மேற்பார்வை நிறைவேற்றுக் குழு ஆகியவற்றில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் பங்கேற்க முடியாது.

### இளைஞர்களுக்கு வாய்ப்பு

குழுக்களுக்கு ஐந்து இளைஞர் பிரதிநிதிகளை அழைக்கலாம். குழுத் தலைவரின் அனுமதியுடன் அவர்கள் கட்சிகளிடம் கேள்வி எழுப்பலாம். உலகில் வேறு எந்த நாட்டிலும் இளைஞர்களுக்கு துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் பங்கேற்க வாய்ப்பை வழங்கியதில்லை. இந்த நாடாளுமன்றத்தின் ஊடாக புதிய முறையை நோக்கி நாம் பயணிக்க முடியும். அதை வேறொரு குழுவிடம் ஒப்படைக்க முடியாது. இதனால் புதிய அரசமைப்பை நோக்கிச் செல்ல முடியும். இனங்களுக்கிடையில் உள்ள பிரச்சனையைத் தீர்க்க வேண்டும். 2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்ததால் மீண்டும் நாம் போரில் ஈடுபட வேண்டியதில்லை.

நான்காவது தொழில் புரட்சிக்கு நாம் இப்போது தயாராக வேண்டும். பணம் சம்பாதிப்பதற்கான வழிகளைக் கண்டறிய அதைப் பயன்படுத்தலாம். ஆனால், நமது பொருளாதாரம் முழுமையாக மறுசீரமைக்கப்பட வேண்டும். அரச துறை வீழ்ச்சியடையும் போது, கல்வி, சுகாதாரம், வீடு போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நம்மிடம் பணம் இருக்கவேண்டும்.

### தேர்தல் முறை மாற்றம்

நமது தேர்தல் முறைகள் குறித்தும் சிந்திக்க வேண்டும். விருப்பு வாக்கு முறையானது வாக்களிப்பு முறைக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் நாடாளுமன்றத்தில் புதிய முறையொன்றை கொண்டுவரும் திறன் நமக்கு இருக்க வேண்டும் - என்றார். (அ-ஒ-இ)

## பலதும்...

யாளங்காணப்பட்ட 55 நபர்கள் மற்றும் 3 அமைப்புகள் உள்ளிட்ட 316 நபர்கள் மற்றும் 15 அமைப்புகள் மேற்குறிப்பிட்ட வர்த்தமானி ஊடாக தடைசெய்யப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டுமுள்ளன - இவ்வாறு ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீதான தடை நீக்கம் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் அந்தப் பொறிமுறை தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெளிவுபடுத்தியுள்ளது.

தடைநீக்கப் பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் தொடர்பான விசாரணைகள் கடந்த மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டன.

நாட்டுக்குள் அல்லது நாட்டுக்கு வெளியில் வாழும் அல்லது பயங்கரவாத அல்லது தீவிரவாத அமைப்புகள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய நபர்கள், அதற்குரிய நிதி, சொத்துக்கள், பயங்கரவாதச் செயல்கள் அல்லது தீவிரவாதச் செயல்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு இருந்தால், அவை பற்றியும் அரச பாதுகாப்பு அமைச்சுக்கு உட்பட்ட அரச புலனாய்வு சேவை உள்ளிட்ட சட்ட நடைமுறைப்படுத்தல் நிறுவனங் களுக்குரிய சி.ஐ.டியினர் கடந்த 6 மாதங்களாக ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வுகளுக்கமைய அது குறித்து முறையான ஆதாரங்களை தாக்கல் செய்த பிறகு, ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அந்த தனிநபர்கள் அல்லது அமைப்புக்கள் பட்டியலிடப்படவோ, நீக்கப்படவோ நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், கடந்த வருடங்களில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் ஒரு வருட காலத்துக்குள் உரிய அதிகாரியிடம் விண்ணப்பத்தின் மூலம் நீக்குவதற்கான கோரிக்கையை முன்வைக்க வாய்ப்பு உள்ளது. அது எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டியதோடு, அதனை உறுதிப்படுத்தும் வகையில் காரணங்கள் முன்வைக்கப்படவேண்டும். பின்னர் பட்டியலிலிருந்து அந்த நபர் அல்லது அமைப்பு நீக்கப்பட வேண்டுமா என்பது குறித்து வெளியுறவு அமைச்சருக்கு பரிந்துரைகளை முன்வைக்கும் கடமை, பொறுப்புவாய்ந்த அதிகாரிக்குரியது.

பின்னர், அரச பாதுகாப்புப் படையினரின் தகவல்களை முழுமையாக ஆய்வு செய்த பின்னர், உரிய அதிகாரியின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அதன்பின்னர் குறித்த நபர் அல்லது அமைப்பு மீதான தடையை நீக்கலாமா? வேண்டாமா? என்பது குறித்து அமைச்சருக்கு பரிந்துரை வழங்கும் கடமை, பொறுப்பு வாய்ந்த அதிகாரியைச் சாரும். அமைச்சரின் முடிவே இறுதி முடிவு என்றும், பாதிக்கப்பட்ட தரப்பினர் அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடுகள் ஒவ்வொன்றின் இறுதி முடிவும், அடுத்த வரவிருக்கும் வர்த்தமானியில் (ஆண்டுதோறும் வெளியிடப்படும்) உரிய அதிகாரி, செயலாளர், பாதுகாப்பு அமைச்சால் வெளியிடப்படும். அந்த நடைமுறைகள் அனைத்தும், ஐக்கிய நாடுகளின் சாசனத்தின்படி மேற்கொள்ளப்படுகின்றன - என்றுள்ளது. (அ-ஒ-இ)

**அறை வாடகைக்கு உண்டு**

திருநெல்வேலியில் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் 2 பெண் பிள்ளைகளுக்கு அறை வாடகைக்கு உண்டு. பல்கலை மாணவிகள், தொழில்புரிவோர் விரும்பத்தக்கது.

077 211 8509

**வீட்டு உதவியாளர் (பெண்) தேவை**

திருநெல்வேலியில் வயது முதிர்ந்த பெண் ஒருவருக்கு வீட்டு வேலை செய்யக்கூடிய பெண் ஒருவர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 211 8509

**CLERK தேவை**

- யாழ் / நல்லூரை அண்டியவர்கள் (பெண்)
- A/L உயிரியல் பாடம் கற்றவர் (பொது)
- தமிழ் Typing நன்கு அறிந்தவர்

077 828 0900

**காணி விற்பனைக்கு**

**யாழ் நாவற்குழியில் 27 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு**

- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

**பார்வை இடும் நேரம் :காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை**

தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493,076 490 6029

## மரண அறிவித்தல்

### திரு.கிருட்டிணபிள்ளை தியாகராசா

**தோற்றம் : 01.05.1935** **மறைவு : 12.08.2022**



வறணன் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த கிருட்டிணபிள்ளை தியாகராசா அவர்கள் கடந்த (12.08.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருட்டிணபிள்ளை சின்னம்மா இணையரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான உருத்திரசிங்கம்-நாகம்மா இணையரின் அன்பு மருமகனும், அன்னம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, பொன்னம்மா, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சிதம்பரப்பிள்ளை, மகேஸ்வரி செல்லத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும், கருணாகரன் (கண்ணன்), கருணாவதி (கருணா-Canada), கவிதா (UK), கிருபாகரன் (ஈசன்), அருட்செல்வி (செல்வி Australia) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், பரமேஸ்வரன், மணிவண்ணன், சுரேந்திரகுமார், சிவகாமினி, ரேணுகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிதர்சன், ஹரிஸ், ஜெனனி, முகுந்தன், சேயோன், அபிசன், அனிஷ், அகிஷ், அபிராமி, மேனன், மகிலஷ்மி, தஷ்மி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

பார்வை, இறுதிக்கிரியை நடைபெறும் இடம்: **St.John's Dixie Cemetery & Crematorium, 737, Dundas St, East, Mississasa, ON, L4Y 2B5**

தகனக்கிரியை இடம்பெறும் இடம்: **Viewing, on Saturday 20th August 2022 between 5.30 PM to 9.00. Viewing, Funeral rites and cremation on Sunday August 21 between 9.00 am to 12.00 pm**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மகன் - கண்ணன் - +1(416-876-7151)**
**மருமகன் - அப்பன் - +1(647-669-0542)**
**மருமகன் - தஸ்வரன் - +1(416-839-4971)**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 20339) 1-6



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.